**கவனிக்க.-** *21.02.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1852 - 2014 පෙබරවාරි මස 28 වැනි සිකුරාදා - 2014.02.28

*1852 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 239 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2014, மார்ச்சு மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, மார்ச்சு மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - கொழும்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, மார்ச்சு மாதம் 28 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, பெப்புருவரி 05.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கொழும்பு | கொழும்பு | கொழும்பு பிரிவில் கொழும்பு வடக்கு (மட்டக்குளிய பகுதி) பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கொழும்பு, டாம் வீதி, கொழும்பு 12. |

2-719

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, பங்குனி மாதம் 28 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, மாசி 03.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | யட்டிநுவர | யட்டிநுவர மெதபலாத்த பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு மற்றும் உடபலாத்த பிரிவில் விவாகப் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர், மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கண்டி |

2-720

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - பதுளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, பங்குனி மாதம் 31 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, தை 30.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| பதுளை | பஸ்ஸர | பஸ்ஸர நகரப் பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர், மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், பதுளை |

2-721

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - அநுராதபுரம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, பங்குனி மாதம் 28 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, மாசி 11.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அநுராதபுரம் | மதவாச்சி | மதவாச்சி பிரதேச செயலக பிரிவில் மேலதிக முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், அநுராதபுரம். |

*2-814*

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - இரத்தினபுரி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, பங்குனி மாதம் 28 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2014, மாசி 11.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| இரத்தினபுரி | எம்பிலிபிற்றிய | எம்பிலிபிற்றிய பிரதேச செயலக பிரிவில் விவாகப் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், இரத்தினபுரி. |

*2-815*

## ஏற்றுமதி விவசாய திணைக்களம்

### இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் III ஆம் வகுப்பின் விரிவாக்கல் உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2014

ஏற்றுமதி விவசாய திணைக்களத்தில் இலங்கை தொழில்நுட்ப சேவையில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பதவியின் வெற்றிடங்களை நிரப்புவதன் பொருட்டு இலங்கை பிரசைகளிடமிருந்து இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பக்காரர் 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதை விஞ்சாமலும் இருத்தல் வேண்டும். தற்போது அரசாங்க சேவையில் மற்றும் மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கான உச்ச வயதெல்லை ஏற்புடையதன்று, போட்டிப் பரீட்சைக்கு அமர்வதன் நிமித்தம் அனுமதி அட்டை வழங்கப்படுவதானது, விண்ணப்பகாரரர் இப்பதவிக்கு தகைமையைக் கொண்டுள்ளார் என ஏற்றுக் கொள்வதற்காக கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய தகைமைகளைக் கொண்டுள்ளாரா என்பதை பரீட்சிக்கும் சந்தர்ப்பத் தின் போது தேவையான தகைமைகள் இல்லை என தெரியவரின் நியமனம் பெறுவதற்கான தகைமையைக் கொண்டிருக்கவில்லை என்று கவனத்திற் கொள்ளப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3. இப்பதவி பொருட்டு பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 6/2006(iv) MN-3 இற்கு அமைய மாதாந் சம்பள அளவுத்திட்டம்.- ரூபா 15,005 - 4 x 180 - 6x240 - 11x 320 - 20 x 360 - ரூபா 27,885 உரித்தாகும்.

4. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.

5. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று கீழே குறிப்பிடப்படுகின்ற சகல ஆரம்பக் கல்வி தகைமைகளையும் மற்றும் தொழிற் தகைமைகளையும் கட்டாயமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

***கல்வித் தகைமைகள் :***

க.பொ.த. (சா/த)ப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது தோற்றி சிங்களம்/தமிழ் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

அத்துடன்

க.பொ.த. (உ/த) ப் பரீட்சையில் ஒரே அமர்வில் உயிரியல் விஞ்ஞானம்/விலங்கியல் விஞ்ஞானம், தாவரவியல் விஞ்ஞானம், விவசாயம், இரசாயன விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம் போன்ற பாடங்கள் இரண்டுடன் விஞ்ஞான பாடங்கள் மூன்றுடன் சித்தியடைந்து இருத்தல்.

***தொழிற்தகைமைகள் :***

அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றின் ஊடாக வழங்கப்படுகின்ற விவசாயம் தொடர்பான இரண்டு வருட டிப்ளோமாச் சான்றிதழை பெற்றிருப்பதானது கட்டாயமாகும்.

6. ***விண்ணப்பிக்கும் முறை.***- (அ) இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய A4 (21cm x 29cm) அளவிலான கடதாசியின் இருபக்கத்தையும் பயன்படுத்தி 1 முதல் 5 வரையிலான பந்திகள் முதலாவது பக்கத்தில் உட்படுத்தும் வகையில் தயார் செய்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்கள் தயார் செய்கின்ற போது அங்கு தலைப்பில் பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் அமைதல் வேண்டும்.

(இ) உரியவாறு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2014.03.31 ஆந் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ ''பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சை திணைக்களம் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பம் உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கின்ற பதவியை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

(உ) பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமான தலைப்பு 2003-02-13 இற்கு செலவு வைக்கும் வகையில் பரீட்சைக் கட்டணமாக ரூபா 600 இனை நாட்டின் எந்தவொரு மாவட்டத்திலும் அல்லது பிரதேச செயலாளர் பணிமனையிலும் செலுத்தி விண்ணப்பகாரரது பெயரிற்கு பெறுகின்ற நிதிப் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டி விடுதல் வேண்டும். அதன் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாக இருக்கும்.

(ஊ) சகல விதத்திலும் பூரணமாகாத மற்றும் தாமதித்து கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எவ்வித முன் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். அத்துடன் தபாலில் காணாமல் போதல் மற்றும் தாமதமாதல் போன்றன தொடர்பில் திணைக்களம் பொறுப்புச் சொல்ல வேண்டியதில்லை.

(எ) அரசாங்க பாடசாலையின் அதிபர் ஒருவர் அல்லது சமாதான நீதவான் அல்லது வழக்கறிஞர் அல்லது அரசாங்க சேவையில் பதவிநிலைத்தர பதவி ஒன்றினை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பத்தில் விண்ணப்பக்காரரது கையொப்பம் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

(ஏ) தற்போது அரசாங்க சேவையில் உள்ளோர் தமது நிறுவனத் தலைவரின் ஊடாக இந்த விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

7. ***பரீட்சை முறை.***- (அ) விண்ணப்பம் அனுப்பி வைத்துள்ள விண்ணப்பகாரிற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். விண்ணப்பகாரர் தமக்கு உரிய பரீட்சை நிலையத்தில் பரீட்சை மண்டப பொறுப்பு அலுவலரிடம் தமது கையொப்பத்தை சான்றுப்படுத்திக் கொண்டுள்ள அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டை இன்றி வரும் எந்த ஒரு விண்ணக்கப்பகாரருக்கும் பரீட்சையில் அமர்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

(ஆ) இந்த பரீட்சை 2014, யூன் மாதம் கொழும்பில் நடைபெறும். பரீட்சைத் தினத்திற்கு 07 நாட்களுக்கு முன்னர் அனுமதி அட்டைகள் கிடைக்காத விண்ணப்பகாரர் கீழே தரப்பட்டுள்ள விபரங்களை சமர்ப்பித்து தாமதியாது பத்தரமுல்லை, பெலவத்தை, பரீட்சை திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளையுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

**தொழில்நுட்ப வினாப்பத்திரத்தின் பாடத்திட்டம்**

*தொழில்நுட்ப வினாப்பத்திரம்*

1. பொதுவான விவசாயம் மற்றும் தத்துவங்கள்;
2. பயிர் உற்பத்தி மற்றும் தத்துவங்கள் விவசாய செயன்முறையின் விஞ்ஞானபூர்வ விடயங்கள் ;
3. மண் மற்றும் உரம், தாவர போசணை, சூழல் தாக்கம்;
4. தாவர இனப்பெருக்க முறை ;
5. நோய் மற்றும் கிருமிநாசினிகளது இயல்பு மற்றும் தாக்கம் ;
6. விவசாயக் கொள்கை, இறந்தகால, நிகழ்கால மற்றும் எதிர்கால பிரமானங்கள்;
7. ஏற்றுமதி விவசாய பயிர் மிளகு, கருவப்பட்டை, கோப்பி, கொக்கோ, ஏலம், கிராம்பு, சாதிக்கா, வெற்றிலை, பாக்கு போன்றவற்றிற்கு உரிய தாவரவியல் விஞ்ஞான விடயங்கள் காலநிலை காரணிகள், உரத்தாக்கம் மற்றும் போசணை, நோய் மற்றும் கிருமிநாசினி கட்டுப்பாடு, அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்பம்;
8. ஏற்றுமதி பயிர் உற்பத்தி சந்தைப்படுத்தல் மற்றும் ஏற்றுமதி பிரமானங்கள் ;
9. காபனிக் விவசாயம்;
10. பண்ணை நிர்வாகம், செடி மற்றும் நடுகைப் பொருள் உற்பத்தி மற்றும் செடி வளர்ப்பு ;
11. விவசாய விரிவாக்கல் முறை மற்றும் விரிவாக்கல் அமைப்பு.

(இ) இந்த பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படுவதுடன் பரீட்சைக்கு தோற்றுகின்ற விண்ணப்பகாரர்கள் யாவரும் சகல வினாப்பத்திரங்கள் பொருட்டும் ஒரே மொழி மூலத்தில் தோற்றுதல் வேண்டும். விண்ணப்பிக்கின்ற மொழி மூலத்தை பின்னர் எக்காரணம் கொண்டும் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

**8. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(I) தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பகாரர் தீவின் எப்பாகத்திலும் சேவை செய்வதற்கு கடமைப்பட்டுள்ளனர்;

(II) தற்போது வெற்றிடம் நிலவும் மாவட்டங்கள் பின்வருமாறு ;

(i) மொணறாகலை
(ii) பதுளை
(iii) ஹம்பாந்தோட்டை
(iv) மாத்தறை
(v) காலி
(vi) இரத்தினபுரி
(vii) நுவரெலியா
(viii) குருநாகல்
(ix) புத்தளம்

9. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை.**- போட்டிப் பரீட்சையின் பொருட்டு உள்ள சகல வினாப்பத்திரங்களிலும் 40% புள்ளிகளை அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெறுகின்ற விண்ணப்பகாரர் மத்தியில் வெற்றிடம் காணப்படுகின்ற எண்ணிக்கையின் இரு மடங்குத் தொகையினரை திறமை அடிப்படையில் தெரிவு செய்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. தகைமைகளை உறுதிப்படுத்திக் கொண்டு விண்ணப்பகாரர் பரீட்சையின் போது பெற்றுள்ள மொத்தப் புள்ளிகளின் திறமை அடிப்படையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். வெற்றிட எண்ணிக்கையைப் போன்று இரு மடங்கு விண்ணப்பதாரருக்கு அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்பட்டவுடனே அது பற்றி பத்திரிகை விளம்பரம் ஒன்று பரீட்சை திணைக்களத்தினால் வெளியிடப்படும். விளம்பரம் செய்யப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் சென்றும் அனுமதி அட்டைகள் கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய அதுபற்றி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறியக் தருதல் வேண்டும். அப்போது விண்ணப்பதாரரது முழுப் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், பரீட்சையின் பெயர் என்பன குறிப்பிடப்படுவதுடன் அவ்வாறு வினவுகின்ற போது உங்களிடம் வைத்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பம் தபாலிடுகையில் பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு என்பன கையில் இருப்பது முக்கியமாகும். கொழும்பிற்கு வெளியே ஆயின் அனுமதி அட்டை அனுப்பி வைப்பதற்கான தொலைநகல் இலக்கத்தை குறிப்பிட்டு மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் உள்ளடக்கப்பட்டு உங்களது வேண்டுகோள் கடிதத்துடன் தொலைநகல் மூலம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறியத்தருவது சாலவும் சிறந்ததாகும்.

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) விண்ணப்பகாரரது முழுப் பெயர் ;
(iii) முகவரி ;
(iv) விண்ணப்பம் பதிவு செய்யப்பட்ட திகதி, பதிவு செய்யப்பட்ட தபால் பணிமனை மற்றும் இலக்கம் ;
(v) பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் இலக்கம், திகதி மற்றும் பிரதேச செயலாளர் பணிமனை.

(இ) பரீட்சைக்கு அமர்வதற்காக விண்ணப்பக்காரர் மேற்கொள்கின்ற போக்குவரத்து செலவுகள் மற்றும் வேறு எவ்வித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

(ஈ) ஆளடையாளம்:- தாம் அமர்கின்ற சகல பாடங்கள் தொடர்பிலும் பரீட்சை மண்டப பொறுப்பு அலுவலர் திருப்தி அடையும் வகையில் விண்ணப்பக்காரர் பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக -

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய அடையாள அட்டை ;
(ii) ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய கடவுச்சீட்டு.

தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தவதற்கு ஆவணங் களை சமர்ப்பிக்காதவிடத்து விண்ணப்பக்காரருக்கு பரீட்சையில் தோன்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(உ) பாடத்திட்டம் :

(i) *விவேகப் பரீட்சை.- (பாட இலக்கம் 01) (நேரம் : 1 மணித்தியாலயம், மொத்தப் புள்ளிகள் 100)*
இதில் விண்ணப்பகாரர் தர்க்கரீதியாக சிந்திக்கும் ஆற்றல் அவரது சிந்தையில் பகுப்பாய்வு அம்சங்கள், தீர்மானம் எடுக்கும், திறன், சீர்தூக்கிப் பார்க்கும்

வல்லமை என்பன அடங்கலான வினாக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும். பல்தேர்வு மற்றும் சுருக்கமான விடை எழுதுதல் என்பவற்றைக் கொண்ட 50 வினாக்கள் வழங்கப்படுவதுடன் சகல வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

(ii) தொழில்நுட்ப வினாப்பத்திரம்.- (விரிவாக்கல் உத்தியோகத்தர்) (பாட இலக்கம் 02) (நேரம் : 2 மணித்தியாலயம், மொத்தப் புள்ளிகள் 100)

தரப்பட்டுள்ள வினாக்களுள் தெரிவு செய்யப்பட்ட வினாக்கள் 05 இற்கு விடையளிக்க வேண்டும்.

தொகையினர் தகைமை பெற்றுள்ள விண்ணப்பக்காரரது பெறுபேற்று அட்டவணை பணிப்பாளர் நாயகம், ஏற்றுமதி விவசாயம் அவர்களுக்கு வழங்கப்படுவதுடன், பரீட்சைக்கு தோற்றும் சகல விண்ணப்பக்காரருக்கும் தாம் பரீட்சையில் ஒவ்வொரு பாடத்திலும் பெற்றுக் கொள்ளுகின்ற புள்ளிகள் மற்றும் மொத்த புள்ளிகள் என்பன உட்படுத்தப்பட்டுள்ள பெறுபேற்று அட்டவணை தனிப்பட்ட முறையில் வழங்குவதற்கு, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும்.

10. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் தொடர்பில் நியமன அலுவலரினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும். அத்துடன் சகல விண்ணப்பக்காரரும் இந்த வர்த்தமானி பத்திரிகையில் குறிப்படப்பட்டுள்ள பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்வதற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

11. வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையைக் கொண்டுள்ளோர் மட்டும் விண்ணப்பம் செய்துள்ளனர் எனக் கருத்திற் கொண்டு உரிய பரீட்சை கட்டணத்தை செலுத்தி உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பக்காரருக்கும் போட்டிப் பரீட்சையில் அமர்வதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இடமளிக்கப்படும். பரீட்சை நடாத்துவது பெறுபேறு வெளியிடுவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்வாகும்.

டபிள்யூ. டி. எல். குனரத்ன,
ஏற்றுமதி விவசாய பணிப்பாளர் நாயகம்.

[ ]
(அலுவலக உபயோகத்திற்காக)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்**

***இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் III ஆம் வகுப்பிற்கு விரிவாக்கல் உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014***

DEPARTMENT OF EXPORT AGRICULTURE

APPLICATION FOR THE COMPETITIVE EXAMINATION RECRUITMENT TO THE POST OF EXTENSION OFFICER OF CLASS III OF THE SRI LANKA TECHNOLOGICAL SERVICE - 2014

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : சிங்களம் 2
தமிழ் 3 [ ]
ஆங்கிலம் 4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக).

01. பெயர் :
1.1 முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக் களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :-----. (உதாரணம் : (SILVA.A.B.)
1.2 முழுப் பெயர் :-----.
(சிங்களத்தில்/தமிழில்)

02. அடையாள அட்டை இலக்கம் : [ | | | | | | | | | ]

3. பால் : பெண் : 1 ஆண் : 0 [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக).

4. நிரந்தர முகவரி :-----.
(ஆங்கில பேரெழுத்துக்களில்)
4.1 அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி :-----.
(ஆங்கில பேரெழுத்துக்களில்)
4.2 தொலைபேசி இலக்கம் இருப்பின் :- [ | | | | | | | | | ]

5. குடியியல் நிலை:-
விவாகமானவர் - 2 விவாகமாகதவர் - 1 [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக).

6. 6.1 பிறந்த திகதி :-
ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

6.2 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதியன்று வயது :
ஆண்டுகள்: [ | | | ] மாதங்கள்: [ | ] நாட்கள்: [ | ]

7. கல்வித் தகைமைகள் :-
அ) க.பொ.த. (சா/த)ப் பரீட்சை :

| முதலாவது தடவை | இரண்டாவது தடவை |
|---|---|
| பரீட்சையின் பெயர் :-----. | பரீட்சையின் பெயர் :-----. |
| ஆண்டு மற்றும் மாதம் :-----. | ஆண்டு மற்றும் மாதம் :-----. |
| சுட்டிலக்கம் :-----. | சுட்டிலக்கம் :-----. |
| மொழி மூலம் :-----. | மொழி மூலம் :-----. |

| முதலாவது தடவை | | இரண்டாவது தடவை | |
|---|---|---|---|
| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
| 1. | | 1. | |
| 2. | | 2. | |
| 3. | | 3. | |
| 4. | | 4. | |
| 5. | | 5. | |
| 6. | | 6. | |
| 7. | | 7. | |
| 8. | | 8. | |

ஆ) க.பொ.த. (உ/த)ப் பரீட்சை:-
வருடம் மற்றும் மாதம் :-----.
சுட்டிலக்கம் :-----.
மொழி மூலம் :-----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

இ) தொழிற் தகைமைகள் :

| டிப்ளோமா மற்றும் நிறுவனத்தின் பெயர் | சித்தி அடைந்த வருடம் | சுட்டிலக்கம் | சித்தி அடைந்த பாடங்கள் | தரம் |
|---|---|---|---|---|
| | | | | |

8. பரீட்சை கட்டணம் பற்றுச்சீட்டு இலக்கம் :-----.
திகதி :-----.
கட்டணம் செலுத்திய பிரதேச செயலாளர் பணிமனை :-----.
செலுத்திய கட்டணம் :-----.

| |
|---|
| பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டினை கழறாதவாறு இங்கே ஒட்டவும். (பற்றுச்சீட்டின் ஒளிப்படப் பிரதியை வைத்திருப்பது பயனுடையதாகும்) |

9. **விண்ணப்பகாரரது உறுதியுரை** :
இவ்விண்ணப்பத்தில் தன்னால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் உண்மையானதும் சரியானதும் என்பதை உறுதியுரைக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது உண்மையற்றது அல்லது பிழையானது என நான் தெரிவு செய்வதற்கு முன் அறியப்படுமிடத்து நான் தகைமையற்றவனாகுவதுடன், தெரிவு செய்த பின்னர் அவ்வாறு தெரியப்படுமிடத்து எத்தகைய நட்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதை அறிவேன்.

மேலும் இப்பரீட்சை நடைபெறுவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற சகல ஒழுங்கு விதிகளுக்கும் உட்படுவதற்கு நான் இணங்குகின்றேன்.

.................................
விண்ணப்பகாரரது கையொப்பம்.

திகதி :-----.

10. **விண்ணப்பகாரரது கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்**:

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கின்ற .................................. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் எனவும் அவர் எனது முன்னிலையில் ............ ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உரிய பரீட்சை கட்டணத்தை செலுத்தி அதன் பற்றுச்சீட்டை இங்கு ஒட்டியுள்ளார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.................................
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரது கையொப்பம்.

திகதி :-----.
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரது பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.

(உத்தியோகபூர்வ முத்திரையோடு உறுதிப்படுத்தவும்).

2-730

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.